விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 17 ஜூல்கஃ 3 இதழ் 168
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-8-84

அக்டோபருடன் 'மொஸாட்' நாட்டிலிருந்து வெளியேறும்

(கொழும்பு)

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்காக இங்கு தருவிக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய உளவுப் படையான 'மொஸாட்' இயக்கப் பிரதிநிதிகளின் சேவையை எதிர்வரும் அக்டோபர் மாதத்துடன் நிறுத்திக் கொள்வதென அரசு தீர்மானித்துள்ளது.

நவம்பர் முதலாம் திகதியுடன் இலங்கையிலுள்ள சகல 'மொஸாட்' பிரதிநிதிகளும் நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்று இங்குள்ள சகல அரபுத் தூதரகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்;

இலங்கையில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளமைக்கு இங்குள்ள அரசியல் கட்சிகளும், முஸ்லீம் இயக்கங்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதே சமயம் இங்குள்ள பல அரபுத் தூதரகங்கள் தூதரக அந்தஸ்திலிருந்து இரண்டாம்தர தூதரகநிலைக்குத்தரம் குறைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

● "தமிழர் உரிமைகளைப் பெறுவதற்கு

போராட்டம் தவிர்ந்த வேறு மார்க்கமில்லை!"

கூட்டணி அறிக்கையில் விளக்கம்

(ஏ. வி. மாணிக்கம்)

"தமிழ் மக்களின் உரிமைகள், சுதந்திரம் சம்பந்தமாக தீர்வு காண்பதற்கு 1975-ம் ஆண்டு தொடக்கம் 1982 வரை இடம்பெற்ற ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளுக்கிடையே உடன்பாடு காணப்பட்ட விடயங்களுக்கு ஏற்பட்ட அதே கதிதான் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, அவரின் விசேட தூதுவர் திரு. பார்த்த சாரதி ஆகியோரின் முயற்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்திற்கும் நடந்துவிட்டது. இப்பிரச்னைக்கு ஓர் இறுதித் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் நற்பணி தொடரவேண்டும்; தொடரும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதியாக நம்பும் அதேநேரத்தில்; மன்னர் மகாநாட்டில் எடுத்த முடிவின்படி தமிழ் மக்களின் விடுதலையைக் காண்பதற்கு போராட்ட மார்க்கம் தவிர்ந்த வேறு எவ்வழியும் எமக்கு இல்லை."

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இன்றுள்ள நிலையில் எமது வழி" என்ற தலைப்பிட்டுவெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(5-ம் பக்கம் பார்க்க)

உரிமைகோரி துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பொன்னையாவீதியைச் சேர்ந்த பாலகுமார் குமாரசாமிக்கு, 'தமிழீழநீதிமன்றத்தின் தீர்ப்புப்படி மரணதண்டனை வழங்கியுள்ளதாகப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது

'தமிழீழ நீதிமன்றம் தீர்ப்பு' என்றதலைப்பிட்டு வெளியிடப்பட்ட அப்பிரசுரத்தில், "விடுதலைப் போராளிகளின் நடமாட்டம், இருப்பிடங்கள் பற்றி தகவல் கொடுத்தமை; சக இயக்கப் போராளிகளின் இருப்பிடங்களை உளவு பார்த்து தகவல் கொடுத்தமை; சக இயக்க மொன்றுல் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்பும் போராளி

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். ஒலிபரப்பு நிலையம்: உபகரணம் அகற்றம்!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் இயங்கிய யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலையம் நிரந்தரமாகவே மூடப்பட்டதாக அறியப்படுகிறது.

இந்த வானொலி உப நிலையத்திலிருந்த சகல உபகரணங்களும் மற்றும் பொருட்களும் லொறிகள் மூலம கபாதுகாப்

(8ம் பக்கம் பார்க்க)

பண்ணை மீன்சந்தை கண்காணிப்பு நிலையமானது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ண்ணை மீன் சந்தையைப் பொலிசார் பொறுப்பேற்று, கண்காணிப்பு நிலையம் அமைத்துள்ளனர்.

யாழ். மாநகர சபைக்குரிய இம்மீன் சந்தையை, யாழ். மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இவ்வருடம்

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவு கூறி மேற்கு ஜெர்மன் உயர்நீதிமன்றில் நெடுமாறன் வாக்குமூலம்

பொன் யூலை 31,

"மேற்கு ஜெர்மனி அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழ் மக்களை மேற்கு ஜெர்மன் அரசு இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது" என்று காந்தி காமராஜ்காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் அண்மையில் மேற்கு ஜெர்மனி உயர்நீதிமன்றில் வாக்குமூலம் ஒன்றை அளித்தார்.

இலங்கைத்தமிழர் சம்பந்தமான விசாரணை ஒன்று மேற்கு ஜெர்மன் உயர்நீதிமன்றில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே, திரு. பி. நெடுமாறன் இலங்கைத்தமிழர்களுக்கு ஆதரவாக ஆஜராகி வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். இவ்வாக்கு மூலத்தை நீதிபதிகள் சுமார் மூன்று மணித்திய லம் பதிவு செய்தனர்.

கடத்தப்பட்ட டிரான்ஸ்மிஸ்டர் தமிழ்நாட்டில் கைப்பற்றப்பட்டது

வேதாரணியம், ஜூலை 31

இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட வானொலி டிரான்ஸ்மிஸ்டர் வேதாரண்ணியம் கடற்கரையில் கைப்பற்றப்பட்டது.

நாகப்பட்டினம் சுங்கப்பகுதி உதவிக் கலக்டர் சோழராஜன் உத்தரவின் பேரில் வேதாரணியம் சுங்கப் பகுதி அதிகாரிகளின் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது மேற்படி டிரான்ஸ்மிஸ்டர் கைப்பற்றப் பட்டது.

"இது 5 கிலோ வாட் சக்தி கொண்டது. இரண்டரை அடி நீளமும் 6 அடி உயரமும் உடைய இது இத்தாலி நாட்

(8-ம் பக்கம் பார்க்க)

மின் கம்பத்தில் இளைஞரின் சடலம் நெல்லியடிச்சந்தியில் சம்பவம்

(மாவை- கரவெட்டி நிருபர்கள்)

நெல்லியடிச் சந்தியில் பஸ் தரிப்பு நிலைய மின்சாரக்கம்பத்தில் கட்டப்பட்டு சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

'பாகு' என்று அழைக்கப்படும் இவ்விளைஞர் துன்னாலையைச்சேர்ந்தவராம். இவரது சடலத்துக்கருகில்

(8-ம் பக்கம் பார்க்க

வழமைபோல் ரயில்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- கொழும்பு புகையிரதசேவை வழக்கம் போல் நேற்று நடைபெற்றது.

நேற்று நண்பகல் "யாழ் தேவி" யாழ்ப் ாணத்திலிருந்து கொழும்பு புறப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

பொதுமக்களுக்கோர் நற்செய்தி!

விஜிதா றவல்ஸ்
(VIJITHA TRAVELS)

யாழ். / தலைமன்னார்
தினசரி சேவை

உறங்கல் இருக்கை ஆசனங்கள் கொண்ட நவீன வசதிகளுடன் செயலாற்றப்படுகிறது.

இச்சேவை இன்று தொடக்கம்

இந்திய கப்பல் பிரயாணிகளின் வசதிக்கேற்ப ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

புறப்படும் நேரம் / இடம் :-

12-00 வண்ணை சிவன்கோவிலடி
12-15 யாழ். பஸ் நிலையம், வைரவர் கோவிலடி.

விஜிதா மோட்டோஸ்

43, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23735

1157

அரிவளம்பரம்

தேவை

சேடா வியாபாரத்தில் நன்கு பழக்கப்பட்ட வானில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை. A. S. சங்கரப் பிள்ளை and பிறதர்ஸ், 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1134

வவனியாவில் சுவர்க்கா உல்லாச விடுதிக்கு முன் அனுபவமுள்ள வெயிட்டருடன் கூடிய றூம்போய்ஸ் தேவை. விண்ணப்ப முடிவு திகதி 10-08-1984 முகவரி: முகாமையாளர் சுவர்க்கா ரூறிஸ்ற் இன்ஸ் மில் வீதி வவனியா. 1128

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (Bajaj) பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 32/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1131

யாழ். நகரில் பிரபலமாக விளங்கும் கிறைண்டிங் மில் விற்பனைக்கோ அல்லது பங்கு தாரரோ தேவை. க. கந்தசாமி, 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1138

நீர்வேலி அரசடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 8 பரப்பு காணி முழுமையாக வேலி, பகுதியாகவோ நன்னீர், மின்சாரம் வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை, அரசகேசரிப் பிள்ளையார்கோவிலடி வடக்கு நீர்வேலி. 803

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கண்டி ரோட்டில் அரியாலை நெடுங்குளம் சந்திக்கு முன்பாக 1 1/2 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 115, A. V. Road, அரியாலை. 1141

தேவை

அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தில் நிரந்தர எழுதுவினைஞராகப் பணிபுரியும் 32 வயதுடைய யாழ்ப்பாணம் உயர் இந்துசமய வேளாளரின இளைஞருக்கு இதேயினத்தில் 25 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் சீதனத்துடன் தேவை. (வெளிநாட்டிலிருந்து வந்த அல்லது அனுப்பக்கூடிய மணமகளும்) ஜாதகக்குறிப்புப் பிரதி புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை கண்ணியத்துடன் திருப்பியனுப்பப்படும். விளம்பர இலக்கம் 1140 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1140

அரசாங்க சிறிய குடும்பத்தருக்கு வாடகைக்கு வீடு ஒன்று யாழ்ப்பாணம் 4 மைல் எல்லைக்குள் தேவைப்படுகின்றது. நல்லூர் வட்டாரம் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1135 C/o ஈழநாடு. 1135

குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் சகலவிதமான பொருட்களும் விற்பனை செய்யக்கூடியதும் துரிதமான வியாபாரம் நடப்பதுமாகிய கடை குத்தகைக்குக் கிடைக்கும். விபரங்களுக்கு; 104/1 அத்தியடி குறுக்கு வீதி, [பிள்ளையார் கோவில் முன்பாக] யாழ்ப்பாணம். 1130

கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் விவசாயிகள் சங்கத்தின் விவசாயிகள் கருத்தரங்கு சங்கத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் தலைமையில் எதிர்வரும் 4ம் திகதிபிற்பகல் கோப்பாய் வடக்கு பாலர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட விவசாய உத்தியோகத்தர்கள்கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

மூதூர் இலக்கம் 3-ஐச் சேர்ந்த காலஞ்சென்ற செகநாதபிள்ளை சின்ன ராஜா என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்து விடயத்தில்

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 576

சின்னராஜா கைம்பெண் ராஜேஸ்வரி இல: 3, மூதூர்

—னுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் இதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்

நீதிமன்றக் கட்டளைப்படி,

கா. மகேந்திரராஜா
பதிவாளர்.
மாவட்டநீதிமன்றம்,
திருகோணமலை.

1984-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ம் திகதியாகிய இன்று தேதியிடப்பட்டது. 1144

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்டூடியோ
யாழ்ப்பாணம்

மட்டக்களப்பு கச்சேரியில்

தமிழ்மொழி ஏற்பாடுகளை அமுலாக்கப் பணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டக் கச்சேரி நிர்வாகத்தில் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள தமிழ்மொழி அமுலாக்கல் ஏற்பாடுகளை உடனடியாக அமுல் செய்யவேண்டுமென்று கச்சேரி தொடர்பான அதிகாரிகளை தமிழ்மொழி அமுலாக்கல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் பணித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் உதவி அரசாங்க அதிபர்கள், கச்சேரி பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள், விசேட சேவை அலுவலர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு சுற்று நிருபமொன்று அனுப்பி வைத்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பாக கூறப்பட்டுள்ளதாவது-:

பொதுமக்கள் அரசகருமவிடயங்களில் தமிழ்மொழியில் தொடர்பு கொண்டால் பதில்கள் தமிழ்மொழியில் வழங்கவேண்டும் உத்தியோகத்தர்கள் தமிழ்மொழி பேசும் பொதுமக்களுடன் உத்தியோகபூர்வமாக தொடர்பு கொள்ளத் தொடங்குமிடத்து அவ்வாறான தொடர்புகளை தமிழ்மொழியில் வைக்கவேண்டும்.

தமிழ்மொழி பேசுபவர் சட்டத்தினால் ஏற்கப்பட்ட எந்தவொரு உத்தியோகபூர்வ தஸ்தாவேஜுக்களினதும் பிரதியையும் தமிழ்மொழியில் பெறுவதற்கு உரிமையுடையவர்.

உத்தியோகத்தர்களால் பொதுமக்களுக்கு வழங்க தயாரிக்கப்படும் உத்தியோகபூர்வ தஸ்தாவேஜுக்களை தமிழ்மொழி பேசுவோர் அதனை தமிழ்மொழியில் பெறுவதற்கு உரிமையானவர்

(5ம் பக்கம் பார்க்க)

வெடிகுண்டுப் பீதி

(மன்னார்)

வவனியா தபால் நிலைய முத்திரையுடன் மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பார்சல் ஒன்றில் அனுப்பியவரின் முகவரி இல்லாததால் வெடிகுண்டுப் பீதி ஏற்படுத்தப்பட்டு பரபரப்பு உண்டாகியது.

மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு வவனியா தபால் நிலைய முத்திரையுடன் பார்சல் ஒன்றுவந்துசேர்ந்தது.

இப்பார்சலை எடுத்து வந்தவர்கள் பார்சலில் அனுப்பியவரின் முகவரியில்லை யென்றும் வெடிகுண்டாக இருக்கலாமோ என்றும் சந்தேகத்தை ஏற்படுத்தினர்.

(7ம் பக்கம் பார்க்க)

நலம்தானை

ஷியாம்ராஜ்

ராஜகோபால்-ராகினி தம்பதியின் அன்புச்செல்வம் ஷியாம்ராஜ் மானிப்பாய் லோட்டன் வீதி இல்லத்தில் அப்பா, அம்மா, ஷர்மினி அக்காவுடன் உறவினர் சகிதம் இன்று தனது முதலாவது பிறந்தினத்தைக் கொண்டாடுகிறான்! 1136

திருக்கேதீச்சர பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்திலிருந்து திருக்கேதீச்சரத்திற்கு பாதயாத்திரை கோஷ்டி யொன்று இம் மாதம் 6ம் திகதி திங்கட் கிழமைபுறப்படவுள்ளது.

இவர்கள் இம் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கேதீச்சரத்தை சென்றடைவார்கள்.

பூநகரிமாக்கமாகச் செல்லும் இக் கோஷ்டியினர் வழியில் 16 கிராமங்களிலுள்ள 16 தலங்களைத் தரிசித்துச் செல்வார்கள்.

1956 ஆண்டு தொடங்கி வருடம் தோறும் கதிர்காமத் திருவிழாக் காலத்தில் நல்லூரிருந்து திருக்கேதீச்சரத்திற்கு இக் குழுவினர் பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை தலைவர் திரு. ஞானப்பிரகாசம் பாதயாத்திரைக் குழுவினருக்கு தலைமை தாங்கிச் செல்கிறார். (ப)

குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாணை ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் உங்கள் பிரயாணச்சிட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services(Pte) Ltd.
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No. 22207 (C. T. S) C E
CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

* வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
* உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International Telecommunication Services
(குளிரூட்டப்பட்டது—பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.) C E

எலக்றிக்கல் வயரிங் பயிற்சி

(செய்முறை பயிற்சியுடன்)

2 மாதம்

ஆரம்பம்: 03—08—84

இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி,

11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [1132]

மென்பந்து கிரிக்கற் சுற்றுப்போட்டி

மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர் (11 பேர்)

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 7—8—1984 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்.

முகவரி;

செயலாளர்,
கிருஸ் கொப்பேஸ் வி. க.
மே/பா. ராஜா வீடியோ நிலையம்,
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.
பதிவு இலக்கம் J/VN/142/83 [1139]

செப்டெம்பரில் கிழக்கு ஜெர்மன் அதிபர்

மேற்கு ஜெர்மன் விஜயம்!

சோவியத்யூனியன் அதிருப்தி!

பொன், ஜூலை 31

கிழக்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹொனெக்கர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் மேற்கு ஜெர்மனிக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இவ்விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கு ஜெர்மன் விரிவாக மேற்கொண்டு வருகின்றது. கிழக்கு ஜெர்மன் அதிபர் ஒருவர் மேற்கு ஜெர்மன் செல்லவிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்று கூறப்பட்டது.

இதே வேளை கிழக்கு, மேற்கு ஜெர்மன் நாடுகளிடையே அண்மைக் காலங்களில் நிலவி வரும் சமரசமான போக்குக் குறித்து சோவியத் யூனியன் அதிருப்தி கொண்டுள்ளது. சோவியத் சார்பு நாடான கிழக்கு ஜெர்மனி, நேட்டோ நாடான மேற்கு ஜெர்மனியுடன் கூடுதல் உறவுகளை வைக்க முயலுவதனை சோவியத் தலைமைப்பீடம் கண்டித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் இவ்வாறு மேற்கு, கிழக்கு ஜெர்மன் நாடுகளின் உறவில் தலையிடுவது குறித்து மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹெல்மட் கோல் சோவியத் யூனியனைப் பலமாகக் கண்டித்துள்ளார்.

கிழக்கு ஜெர்மனின் பெர்லின் நிர்வாகம் மேற்கு ஜெர்மனுடன் ராஜதந்திர உறவுகளைப் பெருக்கிவருவது சோவியத்துக்கு அச்சுறுத்தலாகவுள்ளதென சோவியத் பத்திரிகைகள் பல கருத்து வெளியிட்டுள்ளன.

இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து கிழக்கு, மேற்கென ஜெர்மன் இரண்டாகப் பிரிந்தது. அன்றுமுதல் கிழக்கு சோஷலிஸக் கொள்கைகளையும், மேற்கு ஜனநாயகக் கொள்கைகளையும் பின்பற்றி வருகின்றன.

சோவியத் செல்வாக்கு மிக்க கிழக்கு ஜெர்மனி மேற்குடன் உறவுகளைப் பெரிதும் துண்டித்திருந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் இவையிரண்டுக்குமிடையே ராஜதந்திர உறவுகள் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் காணப்படுகின்றன. (கி)

வெனிசுவெலா விமானக்கடத்தல்:

உணவு, நீர் பெறுவதற்காக 6 பயணிகள் விடுதலை!

கரக்காஸ், ஜூலை 31

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெனிசுவெலா விமானத்தைக் கடத்தியவர்கள் உணவையும், நீரையும் பெறும் பொருட்டு ஆறுபேரை விடுதலை செயதுள்ளனர். இவர்களில் இரு சிறுவர்களும் அடங்குகின்றனர்.

தற்போது இவ்விமானம் கரீபியன் கடலிலுள்ள கரக்காவோ என்ற தீவில் இறக்கப்பட்டுள்ளது. கடத்தல்காரர்கள் ஐந்து மில்லியன் டாலர்களைப் பணயப் பணமாகக் கோரிவருகின்றனர். விடுதலையானவர்கள் தவிர்ந்த 74 பேர் தொடர்ந்து பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

இரு நபர்களே இக்கடத்தலை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் நேற்று உணவும், தண்ணீரும் விமானத்தினுள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அவற்றைப் பெறும்வகையில் பணயமாக வைக்கப்பட்டிருந்த

(7ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர் சட்டசபையில்

12 பேர் பதவி விலகியது கட்சி மாறல் இல்லை!

உயர் நீதிமன்றம் தீர்ப்பு!!

ஸ்ரீநகர், ஜூலை31

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் டாக்டர்பாரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியிலிருந்து பதவிவிலகிய 12 உறுப்பினர்களைக் கட்சி மாறியவர்களாகக் கொள்ள முடியாது என்று இம்மாநில உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஜூலை 2ம் திகதி ஜம்மு-காஷ்மீர் சட்டசபையில் ஆளுங் கட்சியான டாக்டர் பரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய மகாநாட்டுக் கட்சியிலிருந்து 12 எம். எல். ஏ.க்கள் விலகிக் கொண்டனர். இவர்கள் பின்னர் தமது ஆதரவை திரு. குலாம் மொஹமட் ஷா தலைமையிலான ஆளுங் கட்சிக்கு வழங்கினர்

இதையடுத்து சட்ட சபை சபாநாயகர் இப்பன்னிரண்டு பேருக்குமெதிராக உயர் நீதிமன்றில் கட்சி மாறியதாக வழக்குத்தொடர்ந்தார். ஆனால் நீதிமன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடிசெய்து இந்நடவடிக்கையைக் கட்சி மாறல் எனக் கொள்ளமுடியாது எனத் தீர்ப்பளித்தது.

இதேவேளை சட்ட சபையில் தமக்குப் பெரும்பான்மை ஆதரவு இருப்பதை நிரூபிக்க முடியுமெனப் புதிய முதலமைச்சர் குலாம் மொஹமட் ஷா தெரிவித்தார். இன்று நடைபெறும் வாக்கெடுப்பில் 72 உறுப்பினர்கள் கொண்ட சட்ட சபையில் தமக்கு 43உறுப்பினர்கள் இருப்பதைக் காண்பிக்கப்போவதாக அவர் கூறியுள்ளார். [கி]

சர்வதேச ஜூனியர் சதுரங்க சாம்பியன் போட்டி

லண்டன் ஜூலை 31

சர்வதேச ஜூனியர் சதுரங்க சாம்பியன் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பின்லாந்தில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் அறுபது நாடுகளைச் சேர்ந்த சதுரங்க ஆட்டக்காரர்கள் கலந்து கொள்கிறார்கள். சகல ஆட்டங்களிலும் வெற்றி பெறுபவர் சர்வதேச சதுரங்க சாம்பியன் விருதைப் பெறுவர்(கி)

கிரிக்கெட் டெஸ்ட்டை குழப்பத்திட்டமாம்

(லண்டன்)

இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் டெஸ்டின் போது ஈழப் ஆதரவாளர்கள் குழப்பம் விளைவிக்கத் திட்டமிட்டுள்ளனர் என லண்டன் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இம் மாதஇறுதியில் லண்டன் 'லோட்ஸ்' மைதானத்தில் நடைபெறும் டெஸ்டில் நாசவேலைகளை அல்லது குழப்பங்களை விளைவிக்க இலங்கை

(7ம் பக்கம் பார்க்க)

9 தங்கப்பதக்கங்களுடன் அமெரிக்கா முன்னணியில்!

லாஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 31

ஒன்பது தங்கப்பதக்கங்கள் உட்பட பதினைந்து பதக்கங்களுடன் அமெரிக்கா ஒலிம்பிக் போட்டிகளில் முன்னணியில் நிற்கிறது. இதனைத் தொடர்ந்து மேற்கு ஜேர்மன், கனடா சீனா ஆகியன இதுவரை தங்கப் பதக்கங்களைப் பெற்ற நாடுகளாக விளங்குகின்றன.

மேற்கு ஜெர்மன் வீரரான மைக்கேல் குரொஸ் இருபுதிய உலக நீச்சல் சாதனைகளை நீச்சல் பந்தயங்களில் ஏற்படுத்தியுள்ளார். இவர் சுயேட்சை நீச்சலிலும், வண்ணாத்திப் பூச்சிப் பாணியிலான நீச்சலிலுமே புதிய சாதனைகளை ஏற்படுத்தினார். (கி)

பதக்க விபரங்கள்

	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
அமெரிக்கா	9	4	2
கனடா	3	2	1
மே. ஜேர்மனி	3	1	3
சீனா	2	1	1
ஆஸ்திரேலியா	-	1	2
சுவீடன்	-	1	-
ஜப்பான்	-	-	1
நெதர்லாந்து	-	-	1
நோர்வே	-	-	1

தரமான — தமிழ், — ஆங்கில்

வீடியோ படப் பிரதிகளுக்கும்

பழைய, புதிய பாடல்களை

சிறந்த முறையில்

ஒலிப்பதிவு செய்வதற்கும்

கயிலாஸ்

வீடியோ அன்ட் ஓடியோ

றெக்கோடிங் பார்

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

2-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

கிளை :

டீன் ரெயிலறிங்

பஸ் ஸ்ராண்ட், பருத்தித்துறை.

இவ்வார மகத்தான வெளியீடு

K. பாலச்சந்தரின்

அச்சமில்லை அச்சமில்லை

1145

ஆங்கில, கணித, விஞ்ஞான, சாதாரண

உதவி ஆசிரியர் தெரிவுக்குரிய

பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: ✶ ஆங்கிலம்

திரு. T. N. பஞ்சாட்சரம்

பொது அறிவும் பொது உளச்சார்பும்

(பல ஆசிரியர்களின் இணைந்த சேவை)

ஆரம்பம்: 6-8-84

கட்டணம்: ரூபா 190/- (முழுப்பயிற்சிக்கும்)

✶ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்

தபால் மூலம் பாடநெறிகளைப் பெற விரும்புவோர் ASTAN INSTITUTE, JAFFNA என்ற விலாசத்திற்கு ரூபா 60/- காசுக்கட்டளையை அனுப்பி பதிவுத்தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD, JAFFNA.

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்

நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

மாழ நகர அலுவலகம்

28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்,

(சலுசலவுக்கு அண்மையில்)

யாழப்பாணம்.

ரெலெக்ஸ்:- 22285 PERIMR CE

தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்

அவுஸ்திரேலியா கட்டிடம்

த.பெ 1917, 54 போர்க் வீதி, கொழும்பு ;

ரெலெக்ஸ்:- 21652, 21742 21918, 21931, PERIMR CE

தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

மணிவாக்கு

கீழே விழாமல் இருத்தல் நமக்குப் பெருமை யல்ல. ஆனால் விழும்போதெல்லாம் எழுந்திருத்தலே பெருமை.

— கன்பூசியஸ்.

நமது நோக்கு

நீட்டியவிரல்கள் மடிவது எப்போது?

இலங்கையில் மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்க இலங்கை அரசு தவறிவிட்டது என தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சிலதினங்களுக்கு முன் மீண்டும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையில் தங்கி இருப்பது தமக்கு பாதுகாப்பில்லை யென்ற எண்ணத்துடன் சுமார் 40 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் போய்க் குடியேறியிருப்பதின் காரணமாக ஏற்பட்டுள்ள பளுவின் தாக்கத்தினால் உந்தப்பட்டு தமிழ்நாடு முதல் அமைச்சர் இவ்வாறு அடிக்கடி இலங்கைத்தமிழர் நிலைபற்றி கருத்து வெளியிட்டு வருகிறார்.

தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு.எஸ். டி. சோமசுந்தரம் சொந்த முறையில் வெளியிட்ட ஒரு கருத்தில் இலங்கை அரசையும் ஜனதிபதியையும் சற்று காரசாரமாகவே விமர்சித்திருப்பதுடன் இந்திய மத்திய அரசுக்கும் ஒரு யோசனையை வெளியிட்டிருக்கிறார்.

எட்டுமாதங்களுக்கு முன் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்குவதாக ஜனதிபதி ஜயவர்த்தனு கொடுத்துள்ள வாக்குறுதியை அவர் நிறைவேற்ற வேண்டும் அல்லது அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் குழுவொன்றின் பாரபட்ச மற்ற விசாரணைக்கு இவ்விவகாரத்தை விடுவதுடன் அக்குழுவின் சிபார்சுகளை ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ள திரு சோமசுந்தரம் நீதியின் வழியில் செல்ல இலங்கை அரசு ஒருமாத காலத்திற்குள் முன்வராத பட்சத்தில் 'ஈழம்' என்பதை சுதந்திர நாடாகவும் அதன் ராணுவமாக தமிழ் ஈழப்புலிகள் இயக்கத்தையும் இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இதேவேளை இந்திய பாராளுமன்றத்திலும், தமிழ்நாட்டில் பொதுமேடைகளிலும் திராவிட முன்னேற்றக்கழகத்தினர் இலங்கை தமிழர்விடயத்தில் இந்திய அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்துவருவதாகக் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இவை அனைத்தும் தொடர்பு சாதனங்கள் மூலமாக நாம் அறிந்து கொண்டவை. இலங்கை நிலைமை குறித்து இதற்கு மேலும் சம்பவங்களும் கருத்து வெளிப்பாடுகளும் ஆங்காங்கே இடம் பெற்று வருவது நமக்குத் தெரியாமல் இருக்கலாம்,

இலங்கையில் தென்பகுதி அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் இந்தியாவில்நடை பெற்றுவரும் மேற்படி கருத்து வெளிப்பாடுகளை ஒரேயடியாக வெறும் அரசியல் அதிர்வேட்டுக்கள் என்றும், விரைவில் வரவிருக்கும் இந்தியப் பொதுத் தேர்தலை யொட்டித் தமிழ்நாட்டுத் தலைவர்களும் கட்சிகளும் இலங்கைத் தமிழர் பிரச்னையைப் பயன்படுத்திக்கொள்வதற்காக இப்பொழுதே ஆயத்தமாகும் நிலையென்றும் பகடி செய்துவருகிறார்கள்.

ஆனால் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் கடந்த ஜூலைக் கலவரங்களை யடுத்து உயிருக்கு அஞ்சிப் பல்லாயிரம்பேர் தங்கியிருக்கிறார்கள் என்பதை யாரால் மறுக்கமுடியும்? அவர்களில் 'குற்றவாளிகள்' என்று இலங்கை அரசு கருதுகிறவர்களைத் தவிர ஏனையவர்களைத் தருவிப்பதற்கும், அவர்கள் இங்குவந்து அமைதியான சூழ்நிலையில் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? இங்கே அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கே இன்னமும் உரிய மறுவாழ்வுக்கான ஏற்பாடு செய்யப்படவில்லையே! இந்த நிலைமையில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் தேர்தல் வந்தாலென்ன வராவிட்டாலென்ன குரல் எழுப்புவதை நிறுத்திவிடுவார்கள் என எதிர்பார்ப்பதில் அர்த்தம் இருப்பதாக நாம் கருதவில்லை.

இவர்கள் தாம் அரசியலுக்காக இலங்கைத் தமிழர் பிரச்னையைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் பிரிட்டனில் 50பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி சேர்ந்து ஒரு குரல் எழுப்பியிருக்கிறார்களே! அவர்களையும் இனவாதிகளெனப் பட்டம் சூட்டி அலட்சியப்படுத்தி விடலாமா? போல் மீ கார்ட் என்ற அனைத்துலக சட்டவல்லுநர் இலங்கைக்குவந்து ஆய்வுகள் நடத்தி, "சிறிலங்கா - கவலையளிக்கும் தவறுகளின் மலைக் குவியல்" என்ற மகுடத்துடன் இங்கு நடந்த சம்பவங்கள்பற்றி விபரமாக நூல் எழுதியுள்ளாரே! - அவர்கள் எல்லாம் எந்த அரசியல் நோக்கத்திற்காக இதைச் செய்கிறார்கள்?

இது மனிதப் பிரச்னை; மனிதாபிமானத்துடன் தீர்க்கவேண்டிய ஒன்று. இங்கேயும் இது அரசியல் உதைபந்தாகத்தான் பல காலமாக இருந்துவருகின்றது!

ஒருபுறம் சர்வகட்சி மகாநாடு - மறுபுறம் ராணுவ தர்பார் என்ற வகையில் காலத்தை இழுத்தடிக்காமல் இப்பிரச்னை விரைவாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இது தாமதமாகும்வரை வெளி நாடுகளில் இலங்கையை நோக்கி நீட்டப்பட்டுள்ள விரல்கள் மடிக்கப்படும் என்று எதிர் பார்க்க முடியாது.

கூட்டணி உண்ணாவிரதமும்

அதையொட்டிய கருத்துக்களும்

"உளர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பது தமிழில் உள்ள ஒரு முதுமொழி.

இது எவ்வளவுஅர்த்தமுள்ள அனுபவமொழி என்பதற்கு—

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆரம்பித்த சத்தியாக்கிரகம் பொதுமக்களின் ஆதரவில் லாததால் இடையில் கைவிடப்பட்ட தென்றும் சிலவாலிபர்கள் உண்ணாவிரதமிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் கேள்விகள் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்ததனால் ஏற்பட்ட குழப்பத்தினால் அது இடையில் நிறுத்தப்பட்டதென்றும்;

கடந்த 24ந் திகதி மாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் மாலை 6 மணிச் செய்தி அறிக்கை கூறியது நல்லதொரு உதாரணமாகும்.

இந்தச் செய்தி 24ந் தேதி இரவு 9 மணிக்கும் ஒலிபரப்பப்பட்டது.

26ந் திகதி வெளிவந்த பத்திரிகைகள்சிலவற்றில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் யாழ்ப்பாண உண்ணாவிரத நிகழ்ச்சி பற்றி வெளியிட்ட கருத்துக்கள் வெளியாகியிருந்தது. வேறு சில பத்திரிகைகளில் ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்ததிஸ்ஸடிஅல்விஸ்பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில்:

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதம் தீவிரவாத இளைஞர் கோஷ்டியினால் குழப்பப்பட்டிருக்கிறது. வடபகுதி முழுவதையும் தீவிரவாத இளைஞர்கள் தம் விருப்பப்படி ஆட்டிப்படைக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அங்கு செல்வாக்கு இருப்பதாக எப்படி நம்பமுடியும்"?

"கூட்டணியினரின் பயணம் முடிவடையும் கட்டத்துக்கு வந்து விட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையினால் ஓர் உண்ணாவிரதத்தையே வடபகுதியில் திட்டமிட்டபடி நடத்த முடியவில்லையே. வடக்கின் தலைமை இன்று தீவிரவாத இளைஞர்களிடையே இருப்பதாகக் கருதவேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பேசுவதில் அர்த்தம் இருக்கிறதா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. என்றும் ராஜாங்க அமைச்சர் கூறியிருக்கிறார்.

எஸ். எம். ஜி.

கடந்த 24ந் தேதி யாழ்நகர் வீரமாகாளி அம்மன் ஆலயச் சூழலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆரம்பித்த ஒருநாள் உண்ணாவிரதம் சில மணிநேரத்துக்குள் முன்பாகவே கைவிடவேண்டி வந்ததும் அன்று அங்கு நடந்த நிகழ்ச்சிகளும் இன்றுள்ளநிலையில் ஈழத்தமிழர்கள் மகிழ்ச்சியடையக் கூடியதல்ல. இந்தச் சம்பவங்களையிட்டு ஈழத்தமிழர்களும் உலகில்பரந்துவாழும் தமிழர்களும் பெருமைப்படவும் முடியாது.

ஈழத் தமிழர்களுக்காக அனுதாபம் தெரிவித்து வரும் மக்களும் அன்றைய நிகழ்ச்சிகளையிட்டு திருப்தி கொள்ள மாட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள் இலங்கை அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகிறார்கள் என்பது ஜனதிபதியிலிருந்து அமைச்சர்கள் தொட்டு 'தேசியப்' பத்திரிகைகள் மற்றும் சாதாரண எம். பிக்கள் வரை கூறிவரும் குற்றச் சாட்டு ஆடிக்கலவரம் பற்றி கூட்டணியினர் உலகில் தவறான பிரச்சாரம் செய்து வந்துள்ளனரென்றும் 'உண்மையை' உலகுக்கு எடுத்துக் கூறவும் அரசு பலவழிகளிலும் முயற்சி செய்தது. கடைசியில் ஜனதிபதியே பல நாடுகளுக்கும் நேரில் சென்று உண்மையை எடுத்துக்கூறி இலங்கையின் நற்பெயரைக் காப்பாற்றியிருக்கிறார் என்று சில தினங்களுக்கு முன்னர் கூட ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் ஒருவர் கட்டுரை எழுதியிருந்தார்.

ஆடிக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் பலநாடுகளுக்கும் சென்று அங்குள்ள தலைவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர் நிலைபற்றி எடுத்துக்கூறி உதவிகோரினார்.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து அவர் பேசியதைத் தொடர்ந்தே இந்தியாவின் நல்லெண்ணத்துடனை உதவியை இலங்கை ஜனதிபதி முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது.

சிறு சம்பவங்களுக்குப் பின்னர்தான் இந்தியாருடே சஞ்சிகையின் ஆசிரியருக்கும் இந்தியப் பத்திரிகைகளுக்கும் ஜனதிபதி அளித்த பேட்டிகளில் 'அமிர்தலிங்கத்தை இந்திராகாந்தி சந்தித்துப் பேசக்கூடாது' என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

உண்ணாவிரத நிகழ்ச்சி அரசு இங்குள்ள நிலைமையைத் திரித்து எதிர்ப்பிரச்சாரம் செய்யவும் எதிர் நடவடிக்கை எடுக்கவும் நல்லவாய்ப்பாக அமைந்து விட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தி அறிக்கையும் ராஜாங்க அமைச்சரின் விளக்கமும் இதற்கு எடுத்துக்காட்டு.

ஈழத் தமிழர் இன்றைய அவல நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு அவர்களிடையே இதுவரை நிலவிவந்த ஒற்றுமையின்மையே காரணம்.

அரசியல் கட்சித் தலைவர்கள் இதுகாலவரை தேர்தலை நோக்கமாகக் கொண்டு மேடைகளில் வசைபாடி மக்களிடையே வேற்றுமையை வளர்த்து வந்தார்கள்.

இன்று தேர்தலைப்பற்றி சிந்திக்கும் நிலையில் தமிழினம் இல்லை.

அரசியல் கட்சிகளுக்குள் இன்று ஓரளவு ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழரின் விடுதலையை நோக்கமாகக் கொண்டு தமிழ்த் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் எதையும் சாதிக்கவில்லையென்றும் அவர்களின் அகிம்சைமுறையால் எந்த விமோசனமும் கிடைக்காது என்ற விரக்திநிலையிலும் இளைஞர்கள் வேறுவழியை நாடினார்கள்.

ஆடிக் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து தமிழ் நாட்டின் தலைநகரில் சென்னையில் துக்கம் அனுஷ்டிக்கிறார்கள். அங்கு நடந்த சர்வகட்சி மாநாட்டில் 'ஈழத் தமிழர்கள் தமக்குள் வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமைப் படவேண்டும்' என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி உட்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

"ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள் நற்பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும்" வைத்திய அதிகாரி உரை

(யாழ்ப்பாணம்)

"நற்பண்புள்ள மகன் தமது தாய் — தந்தையர்க்காற்றும் பணியினை, ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் கடைப்பிடிக்கவேண்டும்".

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி என். நச்சினார்க்கினியர் யாழ். ஆஸ்பத்திரியில்

பாராட்டப்பெற்ற விஜயரத்தினம்

கடமையாற்றும் ஆண்-பெண் அமைய தொழிலாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அமைய ஊழியரான திரு. செல்லையா விஜயரத்தினத்தை கௌரவித்துப் பாராட்டவும், அமைய தொழிலாளர்களுக்குப் பிரியாவிடைஅளிக்கும் நோக்கமாகவும் இவ்வைபவம் நடாத்தப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதி மேல்மாடியில், அமைய தொழிலாளி திரு. அ. நமசிவாயம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வைத்திய அதிகாரி நச்சினார்க்கினியன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மோட்டார் விபத்தில் சிக்கிய ஒருவர், சுய நினைவற்று மயங்கிய நிலையில் இந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டபோது, வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. விஜயரத்தினம் அந்த நோயாளியை வார்ட்டில் அனுமதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது அந்த நோயாளியிடம் ஏழாயிரம் ரூபா இருந்ததைக் கண்டுபிடித்த திரு. விஜயரத்தினம் அப்பணத்தைப் பத்திரமாக எடுத்து வைத்திய அதிகாரியாகிய என்னிடம் சமர்ப்பித்து அந்த நோயாளியின் உறவினரிடம் ஒப்படைக்கச் செய்தார். திரு. விஜயரத்தினம் செய்த இந்த நற்செயலால் தமக்கும் நற்பெயரைத் தேடிக்கொண்டதுடன், இந்த ஆஸ்பத்திரிக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் பெருமையீட்டிக் கொடுத்தார்" என்று பாராட்டினார்.

திரு. விஜயரத்தினம் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் இவ்வாஸ்பத்திரியில் சிறப்பாகச் சகல ஊழியர்களும் பணியாற்றுவார்கள் என்றும் ஊழலற்ற நிர்வாகம் நடக்கத் தமது ஒத்துழைப்பை வழங்குவோம்" என்றும் உறுதியளித்தார்.

மற்றும் நிர்வாகச் சேயலாளர் திரு. ஏ. ஜி. இரத்தினம், பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். வி. தவராஜா, திரு. அ. கனகலிங்கம், திரு. ஈழத்தமிழ் மணி, திரு. எஸ். விக்னேஸ்வரன் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

(மா)

★ ஒலிம்பிக்

உணவுப் பட்டியல்

லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள இரு ஒலிம்பிக் கிராமங்களிலும் சுமார் 7800 விளையாட்டு வீரர்கள் தங்கியுள்ளனர், இவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் பட்டியல் லருமாறு: இறைச்சி 4,70,000 இறுத்தல்கள் (2.15,000 கிலோகிராம்), பழவகைகள் 5,00,000 இறுத்தல்கள் (2,27,000 கிலோ கிராம்) முட்டைகள் 1,38,600, பாண் 1,03,500 துண்டுகள். இவையாவும் நாளொன்றுக்கானவை. இவற்றுடன் விளையாட்டரங்குகளிலிருப்போருக்கென 20 ஆயிரம் மதிய போசனப் பாசல்களும் தயாராகின்றன.

பதக்கங்கள்

ஒலிம்பிக் பந்தயங்களுக்கான தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களின் மொத்த எண்ணிக்கை 683 ஆகும், இவை மெய்வல்லுநர் போட்டிகள் உட்பட மொத்தம் 24 பந்தயங்களின் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

போதைவஸ்து தடுப்புப் பிரிவு

ஒலிம்பிக் பந்தயங்களில் போதைவஸ்து ஊடுருவதலைத் தடுக்கவென 30 லட்சம் டாலர்கள் செலவில் அதிநவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய ஆய்வு கூடமொன்று அமைக்கப்பட்டுள்ளது, 'போதைவஸ்துக்களை வீனாக உட்கொண்டு எமது அதிநவீன சிகிச்சை, மற்றும் கண்காணிப்பு முறைகளுக்கு உள்ளாக வேண்டாம்' என இவ்ஆய்வு கூடத்துக்குப் பொறுப்பான டாக்டர் ஒருவர் கூறியுள்ளார்.

சில போட்டியாளர்கள் தமக்கு விரைந்து உற்சாகம் வரும்வகையில் போதைவஸ்துக்களை உட்கொள்வது, பல சர்வதேசப் போட்டிகளில் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்தே போதைவஸ்துப் பாவனையைத் தடுப்பதில் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் அதிக கவனஞ் கெலுத்தப்படுகிறது. போதை வஸ்த்து உட்கொண்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படும் வீரர்கள் போட்டிகளிலிருந்து நீச்சப்படுவார்கள்.

கோரிக்கை நிராகரிப்பு

இஸ்ரேலிய ஒலிம்பிக் அணி, 1972-ம் ஆண்டு மியூனிச்சில் இறந்த இஸ்ரேலிய ஒலிம்பிக் வீரர்களுக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் ஆரம்பத்தில் அஞ்சலி செலுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி இக்கோரிக்கையை நிராகரித்துள்ளது.

மியூனிச்சில் 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பாலஸ்தீனிய விடுதலை இயக்க கொரில்லாக்கள் படுகாலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தியா - 17 இலங்கை - 18

லாஸ் ஏஞ்சல்ஸில் நேற்று இடம் பெற்ற பாரந்தூக்கும் போட்டியொன்றில் இந்தியா 17-ம் இடத்தையும், இலங்கை 18-ம் இடத்தையும் பெற்றன!

இலங்கை அணியைச் சேர்ந்த சில்வா என்ற பாரந்தூக்கும் வீரரொருவருக்கு லாஸ் ஏஞ்சல்ஸில் ஜப்பானியப் பயிற்சியாளர் ஒருவர் பயிற்சியளித்தார்.

(கி)

செய்திகள் ★

நாளைய செய்தி இன்று

★ நல்லூர் ஸ்ரீ கந்த சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளைக் காலை 10 மணிக்கு நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

★ உலக பௌத்த மகாநாடு நாளை வியாழக்கிழமை பண்டாரநாயகா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. இம் மகாநாட்டை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆரம்பித்துவைப்பார். இம் மகாநாடு இம்மாதம் 7-ந் திகதி வரை நடைபெறவுள்து. இம் மகாநாட்டில் நேபாளம், தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ் மொழி ...

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

சகலகட்டளைகள் விதிகள், விதானங்கள், பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் விண்ணப்ப படிவங்கள் தமிழ்மொழிமூலம் வைக்கபட வேண்டும்.

அதே நேரம் அரசியலமைப்புச்சட்டம் 22-ம் பிரிவின் பிரகாரம் வடக்கு. கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியும் நிர்வாக மொழியாகும் என்பதற்கிணங்க சகல பதிவேடுகளும் தமிழ் மொழியிலும் வைக்கப்படவேண்டுமென்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

போராட்டத்தை தவிர்ந்த—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

1948-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டங்களால் நாடற்றவராக்கப்பட்டு வாக்குரிமையிழந்த பத்து லட்சம் மலையகத் தமிழருக்கு நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பிரதிநிதியே உள்ளார். 1983-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஆறாவது அரசியலமைப்புத் திருத்தத்தால் வாக்குரிமையற்றவர் ஆக்கப்பட்ட எஞ்சிய பதினைந்து லட்சம் தமிழர்களுக்கும் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதியே இன்று நாடாளுமன்றத்தில் உள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவுசெய்யப்பட்டு ஆளும் கட்சிக்கு மாறிய திரு. செ. இராசதுரையும், அதே போலத் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து அரசாங்கத்திற்கு மாறிப்பின் இறந்த திரு. கனகரத்தினத்தின் இடத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் நியமிக்கப்பட்ட திருமதி பத்மநாதனோ எந்த சனநாயக அளவுகோல் கொண்டும் தமிழ் மக்களின் பிதிநிதிகளாகக் கணிக்கப்படமாட்டார். 1977-ம் ஆண்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இருபது தமிழ்ப் பிரதிநிதிகளில் பதினாறுபேர் தம உரிமையை இழந்துவிட்டனர். இருவர் தம் பிரதிநிதித்துவத் தகைமை இழந்துவிட்டனர். எனவே தொண்ணூறு வீதமான தமிழ்ப் பிரதிநிதித்துவம் வெட்டப்பட்டு பாராளுமன்ற வழி தமிழ் மக்களுக்கு அடைக்கப்பட்டுவிட்டதென்பது தெளிவு. ஆறாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் பின் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தம் அரசியல் உரிமைகளையும் சுயநிர்ணய உரிமையையும் பெறுவதற்கு சட்டரீதியாகக் கிளர்ச்சி செய்யக்கூடிய சனநாயக இயக்கம் செத்துவிட்டது.

அரசாங்கத்தோடு 1979—80-ம் ஆண்டுகளிலும் 1981—82-ம் ஆண்டுகளிலும் நடைபெற்ற நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பாலான விடயங்களை அரசு நிறைவேற்றத் தவறியமையால்மேற்கொண்டு அரசாங்கத்தோடு இருதரப்புப் பேச்சுவார்த்தை எதிலும் ஈடுபடுவதில்லை என்று 1983 ஜூலை 23, 24-ந் திகதிகளில் மன்னாரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்றாவது மாநில மகாநாடு தீர்மானித்தது 1977-ம் ஆண்டு தமிழ் மக்கள் வழங்கிய மக்களாணையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையைக் காண்பதற்கான சாத்வீக நேரடி நடவடிக்கைப்போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்றும் அம்மகாநாடு தீர்மானித்தது.

மகாநாட்டின் இறுதி நாளான ஜூலை 24-ந் திகதி இலங்கை முழுவதும் தமிழினத்திற்கு எதிரான மிக உக்கிரமான இனக்கொலைத் தாக்குதல் ஆரம்பித்தது. ஆயுதப் படையினராலும் தயார்படுத்தப்பட்ட சிங்களக்குண்டர் குழுக்களினாலும் நடாத்தப்பட்ட, மறைக்கமுடியாத, அரச பயங்கரவாதத்திற்குத் தமிழ் மக்கள் பலியாக்கப்பட்டனர். இந்தச்சூழ்நிலையிலேயே இப்பிரச்னைக்கு ஒரு சமாதானத் தீர்வுகாண்பதற்கு இந்தியா தனது நற்பணியை வழங்க முன்வந்தது. இலங்கைஅரசாங்கம் இந்தியாவின் நற்பணியை ஏற்றுக் கொண்டது. நாமும் இந்தியாவின் நற்சேவையை ஏற்றுப் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக உருவான சில திட்டங்கள் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையாக இருக்குமென்று ஜனாதிபதி ஜயவர்த்தனா ஒப்புக்கொண்ட காரணத்தினால் சர்வகட்சி மகாநாட்டில் பங்கு பற்ற நாம் இணங்கினோம். புது டில்லியில் உருவான திட்டங்களை அரசாங்கம் கைவிட்டது மாத்திரமன்றி இன்றைய மாவட்ட அபிவிருத்திச்சபைகள் சட்டத்தினால் வழங்கப்பட்டதிலும்பார்க்க குறைந்த அதிகாரங்களைஉடைய மாவட்டசபைகளையே அடிப்படையாகக் கொண்ட திட்டத்தை முன்வைத்திருக்கின்றது என்பது இன்று உறுதியாகிவிட்டது பூரண இறைமையுள்ள மதசார்பற்ற, சோசலிஸ்ட் தமிழீழ அரசை நிறுவித் தமிழ் மக்களின் விடுதலையைக் காணுமாறு 1977ம் ஆண்டு தமிழ் மக்கள் தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு வழங்கிய ஆணைக்கு மாறாகப் பயனுள்ள எதிர்த்தட்டத்தையும் அளிப்பதற்கு பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் சிங்கள அமைப்புகளும் பௌத்த மகாசங்கமும் தயாரில்லை என்பது தெளிவு. சிங்களக் கட்சி சிங்கள மக்களின் அரசியற் கட்சிகவினதும் அமைப்புகளினதும் பிடிவாதப்போக்கு தமிழ் மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பேச்சுவார்த்தை மூலம் வெல்லும் மார்க்கத்தையும் அடைந்துவிட்டது. 1957 ம் ஆண்டு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கும் 1960ம் ஆண்டு சுறீலங்கா சுதந்திரக் கட்சி- தமிழரசுக்கட்சி உடன்படிக்கைக்கும், 1965 ம் ஆண்டு டட்லி சேனநாயகா செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கும், 1979 - 80 இலும் 1981 82 இலும் இடப்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி ஜயவர்த்தனாவுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களுக்கு ஏற்பட்ட அதேகதி திருமதி இந்திராகாந்தி அவரின் விசேட தூதுவர் திரு. பார்த்தசாரதி ஆகியோரின் முயற்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்திற்கும் ஏற்பட்டுவிட்டது,

[மிகுதி நாளை வரும்]

வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு ஐயனார்கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 26-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 8-ந் திகதி தேர்த்திருவிழாவும், 9-ந் திகதி தீர்த்தத்திருவிழாவும், 10-ந் திகதி பூங்காவனமும், 11-ந் திகதி வயிரவர் பொங்கலும் நடைபெறவுள்ளது.

ஒரு வயோதி -நக்கீரன்-

இந்து சமய முறைப்படி நடக்கும் மரணச் சடங்கு ஒன்றிற்குப் போனோம். யாழ்ப்பாணத்திலிருந்து சில மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமத்திலே இது நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலமானவர் ஒரு வயோதிபர். அவர் சடலத்தைச்சுற்றிப் பல பெண்கள் ஒப்பாரி வைத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு கிழவி இரு கைகளாலும் மார்பிலே அடித்து குனிந்து, நிமிர்ந்து, குனிந்து நிமிர்ந்து சுற்றிக் கொண்டிருந்தார். இறந்தவருக்கு இவள் சகோதரியோ என்று விசாரித்தபோது கிடைத்த பதில் எமக்கு நூதனமாக இருந்தாலும் அந்தக் கிராமத்து மக்களுக்கு சாதாரணமாக இருந்தது. அந்தக் கிழவிக்கு இது தொழில்போல. அந்தக்காலத்தில் கூலி கொடுத்தார்கள். இப்போது வேறு சலுகைகளும் வசதிகளும் கொடுக்கப்படும்.

ஜயர் தனது வேலையை ஒழுங்காகச் செய்து முடித்தார். கிழவன் உயிரோடு இருந்தபோது எந்த உதவியும் செய்யாமல் தொல்லை கொடுத்த பேரப் பிள்ளைகள் பந்தங்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள் அன்றைய தினசரியிலே 'அருமைப் பேரனும்' என்று போடப்பட்டிருந்தது இறந்தவருக்குத் தெரியாது,

கிழவனின் மருமகள் 'ஐயோ மாமா' என்று ஓலமிட்டாள். மனிதன் உயிரோடு இருந்த சண்டை பிடிக்காத நாள் இல்லை. மாமா என்ற சொல்லுக்கு பதிலாக 'சனியன்' 'கிழடு' என்ற சொற்கள்தான் அடிபட்டன. பத்திரிகையில் 'அன்பு மாமனாரும்' என்று போடப்பட்டது கண்மூடிய மனிதனால் பார்க்க முடியாது.

மனைவி, 'என்ரை ஐயோ' என்று வாய்கிழியக் கத்தினாள். 'என்னை விட்டுப் போக உனக்கெப்படி மனம் வந்ததோ?' என்று கதறினாள். 40 வருடங்களாக இவள் மனிதனைப் படுத்தாதபாடு இல்லை. கடைசிநாட்களில் 'ஏன் தொலையாமல் இருந்து எங்கடை பிராணனை வாங்கிறாய்' என்றும் கேட்டவள். தினசரியிலே 'அன்புக் கணவரும்' என்று இருப்பதைக் கண்டு மகிழ மனிதனால் முடியவில்லை. பிள்ளைகள் 'ஐயோ ஐயோ' என்று குளறினார்கள். மனிதன் வருத்தமாக இருந்த போது வைத்தியசாலைக்குக் கொண்டுபோன கார்க்கூலியைக் கொடுப்பதற்கு இவர்கள் மறுத்தவர்கள். பத்திரிகையிலே அன்று 'அமைத் தகப்பனாரும்' என்று போட இவர்கள் தவறவில்லை.

கிழவனின் உண்மையான நண்பர்கள், கார்க்கூலி கொடுத்த பக்கத்து வீட்டுக்காரன் போன்ற சிலர் அழவில்லை, அட்டகாசம் செய்யவில்லை, நடிக்கவில்லை. அவர்கள் வருந்தியது தெரிந்தது. சுடலையிலே வழக்கம்போல் எல்லாம் நடந்தது. பிறமதத்தவர்கள் கவனமாக எல்லாவற்றையும் பார்த்தார்கள், சவப்பெட்டி மூடியைக் கோடரியால் உடைத்தவனும், நெஞ்

(8ம் பக்கம் பார்க்க)

குவலயத்துத் தொடர்புதரு குளோபலுக்கு
இரவேது பகலேது வேறு ஓய்வென்பதேது!
நாளேதும் பொழுதேதும் தவறாத
சேவை தருவதிது!!

குளோபல் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவைகள்
எல்லா நாடுகளுக்கும் — எல்லா நேரங்களிலும் — எல்லா நாட்களிலும்

இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 17[1-08-1984]
வாரம்- புதன்
திதி- சதுர்த்தி முற்பகல் 9-07ன் மேல் பஞ்சமி
நக்ஷத்திரம்- உத்திரம் முன் இரவு 8-38 வரை

மேடம்:- நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும் பிணிஅகலும் உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர் சிறப்புண்டு.

இடபம்:- பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள் இதன் மூலம் பணம் செலவாகும் அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

மிதுனம்:- குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும் பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும் ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் தோன்றக்கூடும் அமைதியுடன் இருக்கவும்.

கடகம்:- தாய் வழியால் பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்குப் எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள் மருத்துவதுறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

சிங்கம்:- செய்தொழிலால் சிறப்பு கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு நீண்டநாள் பிரச்னையொன்று நல்லமுடிவுக்கு வரும்.

கன்னி:- துணிச்சலுடன் காரியங்களை சாதிப்பீர்கள் சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கும் விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

துலாம்:- குடும்பம் ஒன்று கலைக்கோயிலாக மாறும் இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும் பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

விருச்சிகம்:- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம் நம்பிக்கை வைப்பதன் மூலம் பணம்பறிபோகலாம் புதிய தொழில்களினை போடவும்.

தனுசு:- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள் பெரியவர்களின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கும்.

மகரம்:- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்:- புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடம் உண்டு விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மீனம்:- பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும் தொழில்புரியுமிடத்தில் போட்டிமனப்பான்மையை தவிர்த்து கொள்வது நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

உற்சவம்

(புலோலி)

தென்புலோலியூர் உபய கதிர்காம முருகப்பெருமானின் அலங்கார உற்சவம் கடந்த மாதம் 28ம் திகதி ஆரம்பமாகியதுஇம்மாதம் 11ம்திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும்.

பருத்தித்துறை லயன்ஸ் கழகம்

(யாழப்பாணம்)

பருத்தித்துறை லயன்ஸ் கழகத் புதிய உத்தியோகத்தினரை நியமநிறுத்தல் கூட்டம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை முருகானந்த வைத்திய சாலையில் நடைபெற்றது.

வடமராட்சிப் பகுதியில் வைத்தியசேவைகள், காது இருதயம் ஆகியவற்றுக்கான வைத்திய சேவை கல்வி சம்பந்தமான உதவித் திட்டங்கள் பற்றிய சேவை ஆகியன ஆராயப்பட்டன.

கோரிக்கை

(மாவிட்டபுரம்)

வசாவிளான் என்ற பெயர் பிழையாகையால் வயாவிழான் என்று திருத்தி இப்பிழையை நிவர்த்தி செய்யுமாறு உள் நாட்டலுவல்கள் அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர், யாழ் தேர்தல் ஆணையாளர், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு பலாலி தெற்கு வசாவிளான் சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றை மேற்படி சனசமூக நிலையம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது

நவரசினி

மாலை
5-30 நாட்டுவளம் (தமிழ்)
5-35 'கிரேட் ஸ்பேஸ் கோஸ்ரர்' (ஆங்கிலம்)
6-00 விஞ்ஞான நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 தேகாரோக்கிய நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
7-45 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 திரைப்படம்(சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 சிங்களத் திரைப் படம் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

வானலையில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீலஷ்மி தோத்திரம்
6-00 சைவ நற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேடம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
7-00 பாட்டு எம். எஸ். சுப்புலஷ்மி
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியவிருந்து
8-12 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம்
6-30 குன்றின் குரல் எஸ். அழகுப்பிள்ளை

இரவு
7-00 களத்துமேடு
7.15 நாடகம் பொறுமையின் விலை இரண்டாயிரம் எழுதியவர் எஸ் நடராஜா
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல் திருமணம்
7-45 சுவிற்சலாந்து தேசிய தினம் விசேட நிகழ்ச்சி
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் வாத்தியஇசை
9-30 கலைக்கோலம்
10-00 தாளவாத்தியக் கச்சேரி ஐ சிவபாதம்
10-30 குரல்வகை
11-00ஒலிபரப்பு முடிவு

கர்மயோகி பரம்

கடந்த ஜூலை 2-ந் திகதி அமரராகிவிட்ட தோழர் பரமானந்தன் ஒரு முழுமனிதர் தம் வாழ்வின் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டியவர். 1916-ம் ஆண்டு ஜூலை 16-ல் பிறந்த அவர் தமது 68 வயதிலே காலமாகினாலும் வாழ்வின் அர்த்தம் என்று பார்க்கும் போது, அவர் ஜீவிதம் முழுமை பெற்றதாய் திகழ்ந்தது.

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத் திருப்பணி சபையின் தலைவராகவும், கெருடாவில் கந்தசாமி கோவில் தர்மகர்த்தாவாகவும் தொண்டாற்றிய அதே வேளை தோழர் பரமானந்தம் கம்யூனிஸ்ட்டாகவும் விளங்கினார். அவருடைய இடதுசாரி நிலைப்பாடு நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. இந்தநாட்டு இடதுசாரி இயக்கங்களின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது.

தமது இளம் வயதிலிருந்து லங்கா சமசமாஜக்கட்சி உறுப்பினராக விளங்கிய இவர் இடதுசாரி ஐக்கிய முன்னணி கொள்கைபற்றி அக்கட்சியில் ஏற்பட்ட பிளவின் போது விலகி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். இது நடந்தது 1953லாகும். அன்றிருந்து இன்று தம்சாவுவரை அன்னார் கட்சியின் விசுவாசம் மிக்க உழைப்பாளியாக தன்னை நிரூபித்து வந்துள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த தோழர் பரமானந்தம் வட்டுக்கோட்டை தொகுதியில் தம் துணைவியைத் தேடிக் கொண்டார். பிற்காலங்களில் கொக்குவில் அவரது ஊராகத் திகழ்ந்தது. இரண்டு பெண் மக்களையும், இரண்டு ஆண்மக்களையும் பெற்ற அன்னர் அவர்களை நல்ல நிலைக்கு ஆளாக்குவதிலும் தவறவில்லை.

இவர் மேலோட்டத்தில் குழந்தை இயல்பு படைத்தவராயும், நகைச்சுவையாளராகவும் விளங்கினார். ஆனால் உள்ளே திடசித்தம், செயல் வீரம், ஊக்கம் யாவும் கொண்டவீரனாக மிளிர்ந்தார்.

சாகும்போது கூட கம்யூனிஸ்ட்டாகியின் யாழ். மாவட்டக்குழு உறுப்பினராயும் அவர் பணிபுரிந்தார்.

எந்த நிலையையும், சிக்கல்களையும் எந்த நபரையும் சமாளிக்க கூடிய செயல்வீரன் எவதோழர் அ. வைத்திலிங்கம் ஒரு சமயத்தில் தோழர் பரமானந்தம் பற்றிக் குறிப்பிட்டார்.

பொ. குமாரசாமி
இல. கம்யூ. கட்சி.

உரக் களஞ்சியங்கள்

(பச்சிலைப்பள்ளி)

ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 20 உரக்களஞ்சியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உரக்களஞ்சியங்களை அமைப்பதற்கான நிதி உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகுறைந்த இடங்கள் பலவற்றிலேயே உரக்களஞ்சியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இலக்கம் ஈடு 16149

1. மாணிக்கம் வயிரவநாதன்- புலோலி தெற்கு புலோலி. — வழக்காளி

எதிராக

1. இரத்தினம் இராசசிங்கம்
2. பெண் வள்ளியம்மை

} இராமன் தோட்டம் அல்வாய் தெற்கு அல்வாய் — எதிராளிகள்

மேற்குறித்த இல. வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1984-ப் ஆண்டு ஐப்பசி மாதம் 01-ந் திகதி (01-10-84) திங்கட்கிழமை மு ப 10 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்குரூபா 5635/-வும்மேலும் 800/- வருட மொன்றுக்கு நூற்றுக்கு24% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 02-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1984-ம் ஆண்டு மாசி மாதம் 01-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படுப் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 1746.10 கொடுக்க வேண்டும்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோயிற் பற்று அல்வாய் மழவராயக் குறிச்சியிறை வீரசிட்டி இதற்கு யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டு 2279/P இலக்க பிரிவிடல் வழக்கு கடைசித் தீர்வையோடனைப் பட்டதும் உலாந்தா மேஸ்தர் வே.சீவரத்தினத்தால் 1946-ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ம் திகதி 254-ப் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமாகிய படத்தின் படி இதன் விசாலம் நி பர 75 குளி 9 22/32 இதில் குறித்த படத்தில் 7ம் இலக்க துண்டுக்கு நி. பர 18 குளி 4 9/32 இதில் மேற் புறமாக நி. பர 1½ நீக்கி மிகுதிக்கு நி. பர 4½ (நாலரை) இதுவும் மேலே நீக்கி விடப்பட்ட குறித்த நி. பர 1½ சேந்தொன்றுன காணிக்கு நி. பர 6 (ஆறு) கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சின்னத்துரைக்கும் பெண் மனோன்மணிக்குமுரியாதனம் வடக்கு கதிர்காமத்தம்பி ஞானபாஸ்கரனுக்குரியாதனம் மேற்கு செல்லையா மகள் செல்லம்மாவுக்குரியாதனம் தெற்கு மாலிசந்தை வரதராசப்பிள்ளையார் கோவிலாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்திற் சொரியலாய் நி. பர நாலும் கிணற்றில் இருபதில் மூன்று பங்கும் பதிவு இல. A 330/ 113- பரு ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 42200/-.

வே.புவனேந்திரன்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
விலை மதிப்பாளர்

கமல கிரி
புலோலி மேற்கு, புலோலி. 1146

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இலக்கம் ஈடு 16251

1. அருணாசலம் துரைச்சாமி கைம் பெண் சின்னம்மா வல்வெட்டி — வழக்காளி

எதிராக

1. பொன்னையா ஆறுமுகவேல்
2. பெண் கலாரஞ்சனி இருவரும்

} வல்வெட்டி — எதிராளிகள்

மேற்குறிப்பிட்ட இல. வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப் பட்டிருக்கும் ஆதனத்தை 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 01-ம் திகதி 01-9-84) சனிக்கிழமை மு. ப. 10-00 மணியளவில் குறித்த ஆதனத்தில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 15333-33 வும் மேலும் ரூபா 10,000/- வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 22% வட்டி வழக்கு அணைத்த திகதியாகிய 1982-ம் ஆண்டு தைமாதம் 29-ம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ம் திகதி வரையுமான வட்டியும், அதன் பின்தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடம் ஒன்றுக்கு 12 வீதம் வட்டியும், வழக்குச்செலவு ரூபா 1623-25 கொடுக்க வேண்டும்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணமாவட்டம் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயில் பற்று சமரவாகுதேவன் குறிச்சியிறை ஓடையும், பொன்னி தோட்டமும் நி.பர. 18 குளி 09 ஆஞல் ச. அப்பாத்துரை நொத்தாரிசுவால் 6063-ம் இலக்கத்தில் முடிக்கப்பட்ட பிரிவில் உறுதியோடனைக்கப்பட்ட மாதிரிப்படத்தின் படி நி.பர. 19. இது குறித்தபடத்தில் 1-3 துண்டுகள் இதில் 1-ம் துண்டுக்கு நி.பர. 9½ இதற்கு இப்பொழுது நி. பர. 10 எல்லை கிழக்கு செல்லத்துரை கைம் பெண் இராசம்மாவுக்குடைய வாதனம் வடக்கு ரோட்டு மேற்கு பொன்னையா ஆறுமுகவேலுக்குவுடைய ஆதனம் தெற்கு மயில்வாகனம் வல்லிபுரம் பெண் தங்கப்பிள்ளைக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலும் கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றிலும் இயந்திரத்திலும் மற்றும் அவைச் சேர்ந்தவைகளிலும் அரைவாசியும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்டவிலை ரூபா 41000/-

வே. புவனேந்திரன்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர்.

கமலகிரி
புலோலி மேற்கு, புலோலி. 1147

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் — நிர்மலா
அன்புச் சகோதரர்கள்

ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி - கே.ஆர்.விஜயா
என் தம்பி

சாந்தி (யாழ் நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்-மஞ்சுளா
உலகம் சுற்றும்
வாலிபன்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
From 29th
Sean Connery in
DIAMONDS ARE
FOREVER
(007)
(Color)

இன்று மட்டும்
ஹரன் (யாழ்.நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30,
LADY CHATTERLEY'S
LOVER
(strictly for adults)
இக்கடைசிச் சந்தர்ப்பத்தை
தவறவிட்டு பின்பு வருந்
தாதீர்கள்
நாளை முதல்
நல்லநேரம்

வின்சர் (யாழ். நகர்)
Daily 10-30, 2-00,
4-30, 7-00
DIRK BOGARDE
JACQUELINE SASSAND
in
ACCIDENT
The Romantic Drama
for all ages
3-8-84 முதல்
மகாதேவி

லிடோ யாழ். நகர்
Daily
10-30, 2-00, 4-30, 7-00
THE "BURNING"
Strictly for Adults
(Color)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 7-00
Eye Witness
(Strictly for Adults
Thrilling)

Now Showing
றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
RAQUEL WELCH
HANNIE
CAULDER
Action-Adults
Cowboy Film
தன்னைக் கெடுத்தவர்
களையும், தன் குடும்
பத்தை அழித்தவர்
களையும், தனித்து
நின்று பழிவாங்கும்
ஒரு பெண்ணின் வீர
காவியம்.

வீடமைப்புக் கடன் சிபார்சுக் குழு

(ஊரெழு)

தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பத்து லட்சம் வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் வழங்கும் விடயம் தொடர்பான சிபார்சுகளைச் செய்வதற்காக ஊரெழுகிராம சேவை அலுவலர் பிரிவில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஊரெழு கிராமத்திலுள்ள பொதுநல சேவை நிறுவனங்களைச் சேர்ந்த திருவாளர்கள் செ.அழகராசர, ச.நாகலிங்கம், கு.பரமராசா, க.கணநாதன், க.சின்னராசா ஆகியோர் மேற்படி சிபார்சுக் குழுவில் அங்கம் வகிக்கின்றார்கள். ஊரெழு கிராமசேவை அலுவலர் திரு அ.க.த கிருஷ்ணராசா, விஷேட சேவை அலுவலர் திரு.வி.ஜெகதாஸ் ஆகியோர் குழுவின் நிர்வாக பொறுப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகிறார்கள்.

ஊரெழு கிராமசேவை அலுவலர் பணிமனையில் நடைபெற்ற இச் சிபார்சுக் குழுவின் ஆலோசனைக் கூட்டமொன்றில் வீடமைப்புக்கடன் கோரி கிடைக்பெற்ற சுமார் நூற்றுக்கும் அதிகமான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுயாகக் காணப்பட்ட 21 பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் விண்ணப்ப வரிசைக் கிரமமாக இவர்களுக்கு கடன் களைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டு தற்பொழுது நடை முறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக்கு ழுவினுல் ஏற்கனவே செய்யப்பட்ட சிபார்சுக்கு அமைய ஊரெழு கிராமத்தில் சிலருக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நெஞ்சிடை நிறைந்த 'திரு'

(முன்னாள் பா. உ அமரர் திரு. தா. திருநாவுக்கரசு அவர்களின் இரண்டாவது சிராத்ததினம் இன்று)

அமரர் "திரு" அண்ணை அவர்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல தொழில் அதிபருமாக இருந்த போதும் கூட ஒரு சாதாரண மனிதனைப்போல மக்களுடன் பழகும் குணம் அவருக்கு ஒரு தனிச் சிறப்பாகும். இவர் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது மக்களின் தேவையறிந்து குறையைப் போக்கும் இயல்புடையவராயிருந்தார். இவரிடம் வஞ்சம் தீர்த்தல் - பழிவாங்கல் போன்ற தீயஎண்ணங்கள் கனவிலும் கூட இருந்ததில்லை.

இவர் தமது அரசியல் வாழ்க்கையில் அமரர் ஜி, ஜி, பொன்னம்பலத்தை குருவாக ஏற்றிருந்தார். எம் இனத்தின் சோதனைக்குரிய காலமான 197-ம் ஆண்டில் இரு துருவங்களாகி ஒன்றை ஒன்று திட்டித் தீர்த்துக் கொண்டிருந்த தமிழரசு தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும் ஒன்று சேர்க்கும் பணியில் முன்னின்று உழைத்தவர்களில் "திரு" அண்ணாவும் ஒருவர்.

1977ம் ஆண்டில் எமது தொகுதியான வட்டுக்கோட்டைக்கு த.வி.கூட்டணியின் வேட்பாளராக இவர் நியமிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகினார். இவர் தமது காலத்தில் ஆசிரியர்கள் குறைவான பாடசாலைகளுக்கு தமது சொந்தப் பணத்தில் உதவி ஆசிரியர்களை நியமித்து கல்வியின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டார். இந்தச் செயற்பாடு இவரின் தன்நலம் கருதாத ஈகைக்கு எடுத்துக் காட்டாகும்.

இவரிடம் நாம்கண்ட மிகச் சிறந்தகுணம் தலைமைக்கு விசுவாசமாக நடப்பது. இவர் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொண்டபின் எந்த ஒரு கட்டத்திலும் அவரின் பெயர் சொல்லி ஒருவருடன் கதைத்தது கிடையாது. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான பின் அந்த இயக்கத்திற்கும், தலைமைக்கும் உறுதியோடும்- விசுவாசத்தோடும் நடந்து ஒத்துழைப்பு வழங்கினர். தனிப்பட்ட முறையில் என் மீது மிகுந்த அன்புகொண்டிருந்த ஒரு அருமைத் தம்பியை இழந்து நிற்கிறேன் என்று தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 'திரு' அண்ணை அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். அவரின் இனிய குணநலனும் சேவையும் நெஞ்சில் பசுமையாய் நிற்கின்றன.

பண்ணாகம்
முகுந்தன்

"இறக்குமதி விதை உருளைக்கிழங்கை விநியோகம் செய்ய அரசு ஆவனசெய்ய வேண்டும்!"

கோப்பாய் விவசாயிகள்சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் விவசாயிகள் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் தலைவர் திரு இ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

"1984,-1985 காலபோகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கை விநியோகம் செய்ய அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவருவது.

"1983-84 காலாபாக உருளைக் கிழங்குச் செய்கையால் விவசாயகளுக்கு உடனடியாக அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும். இனிமேல் இப்படியான நஷ்டத்திலிருந்து விவசாயிகளை காப்பாற்றும் பொருட்டு பயிர்க் காப்புறுதி செய்ய அரசாங்கத்தைக் கோருவது.

'விதை வெண்காயம் இறக்குமதி செய்வதற்காக விவசாயிகளிடமிருந்து 3 மாதங்களுக்கு முன்னர் சங்கங்கள் பெற்ற முற்பணத்தை வட்டியுடன் வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் வலியுறுத்துவது.

இத் தீர்மானங்கள் தொடர்பாக விவசாயிகற் கருத்தரங் கொன்றை உடனடியாக நடத்தவும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் சந்திப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும் திரு.க.இ. குமாரசாமி தலைமையில் குழு வொன்றும் நியமிக்கப்பட்டது.

உணவு, நீர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

80 பயணிகளில் ஆறு பேரை விடுதலைசெய்தனர்

இதேவேளை இவ்விமானக் கடத்தல் நாடகம் குறித்து ஆராய விசேட அமெரிக்கக் குழுவொன்று கராக்காவோ தீவுக்குச் சென்றுள்ளது. இக் குழு ஒரு பயங்கரவாத எதிர் நடவடிக்கை அணியாக இருக்க லாமென்று கருதப்பட்டது. ஆனால் அமெரிக்கா, தொழில் நுட்பவியலாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவே இது வென்று தெரிவித்துள்ளது.

[கி]

கிரிக்கெட்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தனிநாடு ஒன்றை அமைக்க முயலும் குழுவினர் திட்டமிட்டுள்ளனர் என்றும் இதன் காரணமாக பொலிஸார் இக்குழுக்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று சாவகச்சேரி புனிதலிகோரியார் திருப்பவனி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 23ம் திகதிமாலை 6-00 மணிக்கு பங்குத் தந்தை வண. கருணாகரர் அடிகளால் திருப்பலியுடன் ஆரம்பிக்கப்பட்டு இறுதி நோவினை நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது இன்று புதன் கிழமை ஆலய உற்சவம் இடம்பெறும். அத் தருணம் அப்பங்கினைச்சேர்ந்த சிறுவர் சிறுமியருக்கு முதல் நன்மையும், உறுதிப்பூசுதலும் யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் வழங்கப்படும். காலையில் ஆயரால் திருப்பலி நிறைவேற்றப்படும். அதன் பின்னர் புனித அல்போன்ஸ் லிகோரியாரின் திருச் சொரூப பவனியுடன் உற்சவம் நிறைவு பெறும்

வெடிகுண்டுப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து மன்னார் பொலிசாரை மன்னார் அரசினர் வைத்தியசாலைக்கு அழைத்து, பார்சல் மிகவும் அவதானமாக பிரிக்கப்பட்டது.

பார்சல் பிரிக்கப்படுவதை அவதானித்துக் கொண்டிருந்தவர்கள் இறுதியில் ஏமாற்றமடைந்தனர்.

இப்பார்சலில் வெடிகுண்டு இருக்கவில்லை, சிறு நீர்ப் பரிசோதனை செய்யும் குழாய்களே இருந்தன.

விற்பனைக்கு

யாழ்ப்பாணம்
★ 1.2 பரப்புக்காணி (3-ம் குறுக்குத்தெரு)
★ 3 பரப்புக்காணி (கந்தர்மடம்)
★ 2½ பரப்புக் காணி வீட்டுடன் (வைமன்ரோட்)
★ 2 பரப்புக்காணி (சுண்டிக்குளி)
★ பெரிய வீடு பன்னிரண்டு அறைகள் 1¾ பரப்புக் காணியுடன் (கொழும்புத்துறை)
★ ஒரு நகைக்கடை 14.7 குழி மாடிக் கட்டிடம் (கே. கே. எஸ். ரோட்)
★ 3 பரப்புக்காணி (ஓட்டுமடம் ஓடை ஒழுங்கை)
★ 1 பரப்புக் காணி [அம்மன் ரோட்]
★ 4பரப்புக் காணி (அரியாலை)

திருநெல்வேலி
★ 5 பரப்புக்காணி (கம்பஸ் லேன்)

கோண்டாவில்
★ 2 பரப்புக்காணி (நவரத்தினசாமி லேன்)

நல்லூர்
★ 3 பரப்புக்காணி (வைமன் ரோட்)
★ 4 பரப்புக்காணி (செட்டித்தெரு லேன்)

நீர்வேலி
★ 9 1/2 பரப்புக்காணி (தொழிற்சாலைக்கு உகந்தது)

கோப்பாய்
★ 4 பரப்புக்காணி (ராஜ வீதி)

புன்னாலைக்கட்டுவன்
★ 20 பரப்புக்காணி (பலாலி ரோட் அருகாமையில்)

சுன்னாகம்
★ 22 பரப்புக்காணி (தோட்டம் செய்ய உகந்தது)

தெல்லிப்பழை
★ 4 பரப்புக்காணி (பார் லேன்)

உடுவில்
★ 2 பரப்புக்காணி (மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்)

உரும்பராய்
★ வீடு 5 பரப்புக் காணியுடன்

ஊர்காவற்றுறை
★ 3 பரப்புக்காணி

பளை
★ 20 ஏக்கர் காணி

மாங்குளம்
★ 20 ஏக்கர் காணி (வட்டக்காடு)

ஓமந்தை
★ 5 ஏக்கர் காணி (கண்டி ரோட்)

நுணாவில்
★ மாதாந்த தவணைக் கட்டணமுறையில் காணித்துண்டுகள்
★ வீடு 3¾ பரப்புக் காணியுடன் [கண்டி ரோட்]

கைதடி
★ மாதாந்த தவணைக் கட்டணமுறையில் காணித்துண்டுகள்

TFC
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

இசை ஆசிரியர்களாக நியமனம் பெற்றோர்

(கொழும்பு)

இசை, நடன ஆசிரியர்களாகவும் கலை, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களாகவும் நியமனம்பெற்றவர்களின் சேவைக் காலப் பயிற்சிக்கான கடிதங்கள் தற்போது கல்வித்திணைக்களங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

நியமனம் பெற்ற ஆசிரியர்களின் விபரங்களை கல்விச் சேவைக்குழு உறுப்பினர் கலாநிதி ஏ. கந்தையா நேற்று வெளியிட்டார். விபரங்கள் வருமாறு:

இசை ஆசிரியர்கள்

கிளிநொச்சி மாவட்டம்

திருமதி வி. பொன்னுத்துரை (சுழிபுரம்), செல்விகள் வாசுகி பத்மநாதன் (சித்தன்கேணி), வி. சந்திரதேவி (பருத்தித்துறை), பி. சிவகௌரி (புன்னாலைக்கட்டுவன்) டி. கோகிலமணி (அரியாலை), திருமதி எஸ். சிறிஸ்கந்தராசா (அச்சுவேலி), செல்வி எஸ். சொரூபராணி (சாவகச்சேரி), டி. ஜமுனா (அளவெட்டி), எஸ். இந்திராணி (புலோலி).

கொழும்பு மாவட்டம்:

செல்வி டி. சுதாமதி (வெள்ளவத்தை), திருமதி ஆர். பாஸ்கரநாதன் (கொழும்பு) செல்வி கே. சண்முகரத்தினம் [உரும்பராய்], பி. மகாரஞ்சனி (காங்கேசன்துறை), கே. சிவலோகநாயகி (மறவன்புலோ)

திருமலை மாவட்டம்

செல்விகள் எஸ். உருத்திராணி [கந்தர்மடம்], என். நவநீதராணி, (திருமலை), பி. சரோஜினிதேவி [திருமலை) வி. ரஞ்சனி (திருமலை), வி. சுகந்தினி (திருமலை), என். செல்வரஞ்சனி [திருமலை], எஸ். அம்பிகாவதி (மூதூர்), திருமதி மஞ்சுளாதேவி (திருமலை).

வவுனியா மாவட்டம்

செல்விகள் எம். கிருஷ்ணகுமாரி (வவுனியா), கே. கனகேஸ்வரி (பாவற்குளம்), ஜே. வீரசிங்கம் (பாவற்குளம்) ரி. மனோரஞ்சினி (யாழ்ப்பாணம்) வி. லீலாரமணி [புலோலி].

பதுளை மாவட்டம்

செல்வி கே. மகேஸ்வரி (கோப்பாய்), கே. உமாதேவி [கோப்பாய்]

முல்லைத்தீவு மாவட்டம்

செல்வி சி. கருணாதேவி (முள்ளியவளை), டி. இந்திராணி (முள்ளியவளை) திருமதி ஆர். சந்திராதேவி (வட்டுக்கோட்டை) செல்வி. கே. சத்தியதேவி (முள்ளியவளை) திருமதி. வி. செல்வவிக்னேஸ்வரன் (முள்ளியவளை)

மன்னார் மாவட்டம்:

செல்விகள். பி. தங்கராணி (வட்டுக்கோட்டை) ஏ. சாந்தினி (நல்லூர்) ஏ, நளினி (அளவெட்டி) ரி. கமலாம்பிகை (தெல்லிப்பளை) எஸ். தேவவதனி (சாவகச்சேரி)

மட்டக்களப்பு மாவட்டம்:

செல்வி. வர்ணகுலசிங்கம் (கல்லடி) வி. விவேவிதா (கல்லடி) எஸ். சாந்தினி (மட்டுநகர்) எஸ். ஆனந்தலக்ஷ்மி (மட்டுநகர்) என். மைதிலி (மட்டுநகர்) திருமதி. பி. செல்வராசா (மட்டு) செல்வி. என். மலர்விழி (கல்லடி) பி. ராஜசிறி (நல்லூர்)

(தொடரும்)

மரண அறிவித்தல்

ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை.

சூராவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் வாசியுமாகிய ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை காலமானார். இவர்காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக்கணவரும், நவரஞ்சிதமலர் (ஆசிரியை) அவர்களின் அன்புத்தந்தையும், இரத்தினசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமைச்சடங்குகள் இன்று (1-8-84) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ் ஆசனகோயில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்துஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. 1159

மரண அறிவித்தல்

B. M. சவரிமுத்து

(இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்)

B. M. சவரிமுத்து காலமானார் இவர் திரேசாவின் அன்புக் கணவரும், யசிந்தா, பபி, காலஞ்சென்ற ஜெயா, ஜோய், ஜொய்சி, இந்திராணி, றஞ்சினி, றஞ்சன், மெய்ஸி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்ரர், சாந்தி, செவீன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி றெஜீனா கிறிஸ்தோத்திரம், திருமதி டெய்சி சூசைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். புனித சார்ல்ஸ் மகாவித்தியாலயம், B. M. அன்ரனிப்பிள்ளை (நிறைவேற்று பொறியியலாளர். பெருந் தெருக்கள் திணைக்களம், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு சகோதரனும், நவீன், இனக்ஷி, மேவீன், கரோலின் ஆகியோரின் பேரனுமாவார்

இறுதி கிரிகைகள் பின்பு அறிவிக்கப்படும்

(1161) 51, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

மல்லாகம் திருமதி ஞானலட்சுமி சிவப்பிரகாசம்

மல்லாகம் திருமதி ஞானலட்சுமி சிவப்பிரகாசம் 31-7-84 காலை 5 மணிக்குக் காலமானார். இவர் சட்டத்தரணி ஆர். என். சிவப்பிரகாசத்தின் அருமை மனைவியும், சட்டத்தரணி சிவ. சிறீதரன், சிவ. கங்காதரன் [ஒட்டோஸ்], திருமதி கேதார கௌரி பாலசுப்பிரமணியம் [U. K], ஆகியோரின் அருமைத் தாயாரும், சட்டத்தரணியும், முன்னாள் மூதவை உறுப்பினரும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவருமாகிய சு. நடராசாவின் அருமைச் சகோதரியும், ந பாலசுப்பிரமணியம் [U.K], திருமதி ஞானசக்தி சிறீதரன், திருமதி கைலைநாயகி கங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சத்தியவதி நடராசாவின் அன்புமைத்துனியும், திருமதி ஜெயலட்சுமி விக்னராசா [U.K], திருமதி மனோகரி கணேஸ்வரன் (New Guinea). திருமதி சோதிலட்சுமி விவேகானந்தன், திருமதி சந்திரா தேவி சபாநாதன், ந. சிவநமசிவாயம் ஆகியோரின் தந்தைவழி அன்புமாமியாரும் ஆவர். ஈமக்கிரியை இன்று (1-8-84) புதன்கிழமை மாலை 4 மணிக்கு மல்லாகத்தில் நிகழும்.

1162

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

இப்படியும் நடக்கிறது

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கிராமம் அது.

இங்கு ஓர் அம்மன் ஆலயம் இருக்கிறது. ஆண்டு தோறும் சிறப்பான முறையில் 'வேள்வி' நடைபெறுவது வழக்கம். ஆனால் இவ்வருடம் இந்தக் கோவிலில் மிருக பலி நடைபெறுதது அந்தக் கிராம மக்களுக்கு 'என்னமோ ஏதோ' போல் இருந்திருக்க வேண்டும்.

அந்தக் கிராம மக்களில் சிலர் ஒன்று சேர்ந்தனர். குறிப்பிட்ட அம்மன் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள வளவு ஒன்றில் திடீர் வைரவர் 'ஆலயம்' அமைத்து, வைரவர் சூலத்துக்கு முன்பாக வேள்வியை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள்! அதுவும் திரை மறைவில் அல்ல.

மூன்று 'டி. வி.' படங்கள் தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்டு, பெருந்தொகையான கிராம, அயற் கிராம மக்கள் புடைசூழ மிருக பலி அரங்கேற்றப்பட்டது. எண்ணிப் பார்த்தபோது நாற்பத்து ஐந்து தலைகள் காணப்பட்டன!

-ஊடுருவி

கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டில் தயாராகிஜேர்மன் உதிரிப்பாகங்கள் கொண்டது. இதன் மதிப்பு 10 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து விசாரணை நடைபெறுகிறது.

வழமைப்போல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது அதிகமானபிரயாணிகள் சென்றதாகவும் எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. என்றும் இன்று நண்பகல் 'இன்ரசிற்றி' ரயில், சேவையிலீடுபடும் என்றும் யாழ் புகையிரத நிலைய அதிபர் தெரிவித்தார். (மா)

கூட்டணி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழர்களுக்கு இன்று அநுதாபமும் ஆறுதலும் ஆதரவும் தருவது தமிழ்நாடு தான்!

தமிழ்நாடு முதலமைச்சர் இளைஞர் இயக்கங்களுக்கிடை ஒற்றுமையை ஏற்படுத்த பெரும் முயற்சி எடுத்தார்.

ஒரே இலட்சியத்தைக் கொண்டவர்கள் தமக்குள் எதற்காக மோதிக்கொள்ள வேண்டுமோ தெரியவில்லை.

யாழ். ஒலி...

(1-ம் பக்கத் தெடர்ச்சி)

புடன் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஓர் உப அஞ்சல் நிலையமாக இயங்குவதற்கென அமைக்கப்பட்ட இக் கட்டிடம் இப்பொழுது வெறுமனே காட்சியளிக்கிறது.

மண்டைதீவு உப அஞ்சல் நிலையத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கையாக ஒலிப்பதிவு செய்வதற்கெனப் பண்ணையில் கட்டப்பட்டிருந்த ஒலிபதிவு நிலையமும் இதுவரை இயங்காதது குறிப்பிடத்தக்கது. (மா)

உரிமை கோரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் காட்டிக் கொடுத்தமை போன்ற குற்றச் செயல்கள் குறித்து நீர விசாரித்து நிரூபிக்கப்பட்டதை அடுத்தே இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

மின் கம்பத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டதாகக் கூறப்படும் பிரசுரம் ஒன்றில்: 'செல்வபாகு' என்று எழுதப்படும் இவர் அம்பலவர் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற கொள்ளை, பல பெண்கள்மீது பலாத்காரம், ஏழைகளின் வீடுகளுக்கு தீவைத்தமை, போன்ற சமூகவிரோதகுற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும், இதனால் இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

இச்சம்பவம் பற்றி பருத்தித் துறைப் பொலிசார் விசாரணை நடத்திவருகிறார்கள்.

ஊர்வாய்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சாங்கட்டை வைத்தவனும், ஏனையோரும் சாராய வெறியுடனும் நாற்றத்துடனும் திரிந்தார்கள். அவர்கள் வாய்களிலிருந்து வந்த பகடிகளும் சொற்களும் எழுத முடியாதவை. ஒரு செத்த பாம்பை எரிப்பது போல இருந்தது பார்ப்போருக்கு. கொள்ளிவைக்கும் நேரம். நல்ல வெறியுடன் மேலும் ஒருவர் தள்ளாடிய வண்ணம் வந்து கைகூப்பி நின்றார். அவரைப் பார்த்து நெஞ்சாங்கட்டை வைத்தவன், 'எங்கைபாப்பம் கனகு இனி நீ ஒரு புடி புடி பார்ப்பம்' என்றான். கனகு துவங்கினார். தேவாரம் சாராய ஆவியுடன் கலந்து சுடலையிலே பரவியது. ஒரு மாதத்திற்கு முன் வேற்று மதத்தவர் ஒருவரின் மரணச் சடங்கிற்குப் போயிருந்தோம். அது நினைவில் வந்தது. இறந்தவரையும் நினைத்து, அவரின் இறுதிச் சடங்கு நடந்த முறையையும் நினைத்துத் தலைகுனிந்தோம். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்.....''

சின்னமடு உற்சவம்

[யாழ்ப்பாணம்]

பிரசித்திபெற்ற கத்தோலிக்க தேவாலயமான சின்னமடு செபமாலை மாதா ஆலய வருடாந்தத்திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது.

தினமும் நடைபெற்றுவரும் மாலை ஆராதனைகள் ஐந்து மணிக்கு ஆரம்பமாகின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்சவத்திற்கான விசேட ஏற்பாடுகளை வணபிதா. ரெஜிஸ் ராஜநாயகம் செய்துள்ளார். போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்பு

(கரவெட்டி)

நேற்று முன்தினம் இரவுகரவெட்டிப்பகுதியில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. நேற்றுக்காலையும் வெடிச்சத்தங்கள் நெல்லியடியில் கேட்டன.

பண்ணை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குத்தகைக்கு எடுத்திருந்தனர்.

இங்கு மீன் மொத்த விற்பனை நடைபெற்று வந்தது.

கடந்த மாதம் 25-ம் திகதி பொலிசார் இம்மீன் சந்தையைப் பொறுப்பேற்று 'கண்காணிப்பு நிலையம்' அமைத்துள்ளனர்.

பண்ணையில் நடந்துவந்த சந்தையை வேறு இடத்தில் நடத்துவதற்கு இடம்பார்க்கப்பட்டு வருவதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார். (க)

மரண அறிவித்தல்

சுந்தரம்பிள்ளை சிவசுப்பிரமணியம்

21/2 கந்தர்மடம் அன்ன சத்திர ஒழுங்கையில் இருப்பிடமாகக் கொண்டவரும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் கடமையாற்றியவருமாகிய சுந்தரம்பிள்ளை சிவசுப்பிரமணியம் காலமாகிவிட்டார்.

இவர் வியாகம்மாவின் அன்புக் கணவரும், குலேந்திரன் (ஜேர்மனி), ஞானேந்திரன், தனலெட்சுமி, ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கமலேஸ்வரி, புஸ்பலோசினி சோமநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயேந்திரன், ஜெசிந்தா, ஜெயசித்திரா, துவாரகா, செந்தில்குமரன், சகுந்தலா, கௌசல்யா சுகன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 1-8-84 புதன் கிழமை 9 மணியளவில் தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இதை உற்றார் உறவினர் அன்பர்கள் யாவருக்கும் பணிவன்புடன் அறியத்தருகிறேன்.

அறிவிப்பாளர்

சி. ஞானேந்திரன்

கந்தர்மடம்

(1160)